**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 08ம் நாள்**

**இ.ம.எண்.821/2023,**
**இன்**
**அ.வ.எண்.316/2015**

1. G. சுரேஷ்
2. G. கோபாலகிருஷ்ணன்
3. G. செல்வராஜ் ..மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. G. மோகன்குமரார்
2. G. சிவலிங்கம்
3. S. லதா
4. M. ஸ்ரீதர்
5. V. வசந்தி
6. R. கிருஷ்ணவேணி
7. K. லேகேஸ் ( இறப்பு)
8. M. வள்ளியம்மாள்
9. பொன்னம்மாள்
10. ஆணையர், திருப்பூர் நகராட்சி
திருப்பூர் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 08.01.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. பக்தபிரகலநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 மற்றும் 8,9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும்,

7ம் எதிர்மனுதாரர் இறந்து விட்ட நிலையிலும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

அசல் மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 9, விதி 4ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்** :

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 19.10.2022ம் தேதியன்று 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க மேல்நடவடிக்கைக்காக அசல வழக்கில் வாய்தா போடப்பட்டிருந்தபோது அன்றையதினம் 1ம் மனுதாரருக்கு உணவு ஒவ்வாமை காரணமாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேல்நடவடிக்கை எடுக்க இயலவில்லை. எனவே, 19.10.2022ம் தேதியன்று அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்குஎடுக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 10ம் <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 08.09.2021ம் தேதியன்று அசல வழக்கு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அதை மீண்டும் கோப்பிற்கு எடுத்து அசல் வழக்கை சரியாக நடத்தால் மீண்டும் தள்ளுபடிக்கு விட்டுவிட்டார்ள். அசல் வழக்கை நடத்துவதற்கு மனுதாரருககு விருப்பம்இல்லை. அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

6. <u>தீர்வு</u> :–

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், –– அசல் வழக்கில் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை நீக்கறவு செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2.** 10ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், ––. எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3.** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முடிவில்**, --

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.22 11:23:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.22 11:23:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்